
# கிருபையுள்ள வார்த்தை®

# KIRUBAIYULLA VAARTHAI

லூக்கா (LUKE) 4:22


Vol - 22 | August ஆகஸ்ட் | 2021

ஆண்டு சந்தா ரூ. 120/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-



கௌரவ ஆசிரியர் **BETTY CHOATE** ஆசிரியர் **பிலேமோன் ராஜா**


புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| பெண்கள் பகுதி | 7 |
| சிறுவர் பகுதி | 10 |
| பிரசங்கிக்கும் பிரசங்கங்கள் | 13 |


*In memory of J.C. CHOATE*


*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லிராஜா.** M.Th.,
**R. ஆண்டனி ராஜா.** D.Th.,M.B.A (Bible Studies)
**Dr. V.S. இம்மானுவேல்.** M.Sc., D.D., **C. கியாமிலஸ் கார்த்திக்.** B.Sc.,
**P. பேபி ராஜா** D.Th., **E. ஜோசப் பிரதீப்** B.Th.,

சட்ட ஆலோசகர்கள்
அட்வகேட் B. கருப்பசாமி பாண்டியன் B.A., B.L
அட்வகேட் V. சுப்பிரமணியன் M.A., B.L


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

**நம்பிக்கை T.V. யில்**

**ஞாயிறு மதியம் 3:30 மணி**

**தமிழன் T.V. யில்**

**ஞாயிறு காலை 7:00 மணி**

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன்ராஜா.** M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)
சகோ. **கிங்ஸ்லி ராஜா.** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

**OUR ENGLISH TV PROGRAM**

**SALVATION TV**
**Every Sundays 2pm**
**Speakers:**
**Jerry Bates & Kingsly Rajah**




**கிருபையுள்ள வார்த்தை புதிய வெளியீடு**

**கிருபையின் கீதங்கள்**

**விபரங்களுக்கு :**


**92 4421 4421, 92 4431 4431**

**பாடல் புத்தகம்**
421 பக்கங்கள்
514 தமிழ் பாடல்கள்
29 ஆங்கில பாடல்கள்
100 சிறுவர் பாடல்களுடன்


**கிருபையுள்ள வார்த்தை**
கர்த்தரை மகிமைப்படுத்திட நம்மை வழிநடத்தும்
வல்ல மீட்பரின் வார்த்தை


**World Literature Publication**
Post Box No. 15, Arasaradi, Madurai 625 016, India






**Send Postal Expenses only
and
receive
The Voice of Truth
International**

# வேதாகம குடும்பங்கள்

ஆசிரியர் உரை
P.C. பிலேமோன் ராஜா



**அன்பான கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும், ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் எனது அன்பின் வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள் !**

இந்த மாதம் வேதாகமத்தில் உள்ள குடும்பங்கள் சிலவற்றையும், அவர்களின் குறை நிறைகளையும் பற்றி தியானித்து, நமது குடும்பங்களை கர்த்தருக்கு உகந்ததாக திருப்ப தியானம் செய்வோம்.

## 1. முதல் குடும்பம்

குடும்பம் என்பது சர்வவல்ல கர்த்தரால் உண்டாக்கப்பட்டது. அது அவருடைய பார்வையில் மிகவும் மேன்மையானது மற்றும் பரிசுத்தமானது என்பதை வேதவசனங்கள் தெளிவாக விளக்குகின்றன (மல்கியா 2:14-17; எபி 13:4).

இந்த உலகத்தின் முதல் குடும்பம் ஆதாம், ஏவாள் மற்றும் அவர்களது பிள்ளைகள் ஆவர். மிகவும் ஆசீர்வதிக்கப்பட்ட தம்பதி இவர்கள். சர்வவல்ல கடவுளாலே படைக்கப்பட்டவர்கள். அவரோடு தினமும் உறவாடும் வாய்ப்பை பெற்றவர்கள். தங்களின் சுயஇச்சையினால் கர்த்தருடைய கட்டளையை மீறி, பாவம் செய்து, சாபம் பெற்றனர். இவர்களது மூத்த பிள்ளை காயீன், தன் உடன்பிறந்த சகோதரனையே கொலை செய்தான். பொய்க்கு பிதாவாகிய பிசாசின் பொய்க்கு மயங்கி, சூழ்ச்சிக்கு உட்பட்டு பாவம் செய்தனர் **(ஆதியாகமம் 3).** ஆதாம் செய்ததை பைபிள், துரோகம் என்கின்றது **(ஒசியா 6:7).** இங்கே ஆதாமும் ஏவாளும், கர்த்தர் அவர்கள் மீது வைத்திருந்த நம்பிக்கையை உடைத்துப் போட்டனர். இந்த குடும்பம் நமக்கு ஒரு எச்சரிப்பின் பாடமாக இருக்கின்றது.

## 2. நோவாவின் குடும்பம்

நோவாவின் குடும்பம் கீழ்படிதலுக்கு ஒரு முன் மாதிரியான குடும்பம். கர்த்தர் நோவாவிற்கு இட்ட கட்டளையை இந்த குடும்பம் முழுமையாக கடைபிடித்தது. நோவா தனக்கு கட்டளையிடப்பட்டதையெல்லாம் செய்து முடிக்க இக்குடும்பம் துணையாக இருந்தது என்று சொன்னால் அது மிகவும் பொருத்தமாகவே இருக்கும். மற்ற அனைவரும் வேடிக்கையாக நினைத்ததை, இவர்கள், மழை என்பது பெய்யும் என்றும், இந்த உலகம் தண்ணீரால் அழியும் என்றும் விசுவாசித்த குடும்பம். விசுவாசம் என்பது, நம்மை கீழ்ப்படிதலை நோக்கி வழிநடத்தும். கர்த்தர் சொன்னபடி நடப்பதே பேரழிவிலிருந்து நம்மை காக்கும். **2 பேதுரு** "பூர்வ உலகத்தையும் தப்பவிடாமல், நீதியைப் பிரசங்கித்தவனாகிய நோவா முதலான எட்டுப்பேரைக் காப்பாற்றி, அவபக்தியுள்ளவர்கள் நிறைந்த உலகத்தின் மேல் ஜலப்பிரளயத்தை வரப்பண்ணி;"

## 3. ஆபிரகாமின் குடும்பம்

**எபி 11:8-12** "விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது, கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப் போனான். விசுவாசத்தினாலே அவன் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திலே பரதேசியைப் போலச் சஞ்சரித்து, அந்த வாக்குத்தத்தத்திற்கு உடன் சுதந்தரராகிய ஈசாக்கோடும் யாக்கோபோடும் கூடாரங்களிலே குடியிருந்தான்; ஏனெனில், தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு அவன் காத்திருந்தான். விசுவாசத்தினாலே சாராளும் வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவரென்றெண்ணி, கர்ப்பந்தரிக்கப் பெலனடைந்து,வ யதுெ சன்றவளாயிருந்தும்பி ள்ளைபெற்றாள். ஆனபடியால், சரீரஞ்செத்தவனென்று எண்ணத்தகும் ஒருவனாலே, வானத்திலுள்ள பெருக்கமான நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரையிலுள்ள எண்ணிறந்த மணலைப் போலவும், மிகுந்த ஜனங்கள் பிறந்தார்கள்."

ஆபிரகாமின் குடும்பம் விசுவாசத்திற்கு ஒரு முன் மாதிரியான குடும்பம். கர்த்தர் காண்பித்த திசையை நோக்கி பயணித்தனர். தங்கள் உறவு மற்றும் ஊரை விட்டு செல்வதை பற்றியும் கவலைபடவில்லை. கர்த்தர் ஆபிரகாமிற்கும் அவன் சந்ததிக்கும் கானான் தேசத்தினை தருவேன் என்ற போதும், அவன் ஈசாக்கு யாக்கோபோடு கூடாரங்களில்

குடியிருந்து, பரம கானானை நோக்கி தன் பார்வையையும், விசுவாசத்தினையும் திருப்பினான். இம்மைக்காக அவன் கர்த்தரை பிடித்துக்கொள்ள வில்லை; அப்படி இருந்திருந்தால் அவன் 25 ஆண்டுகளாக பிள்ளையின்றி பரதேசிப் போல சஞ்சரிக்க வேண்டிய அவசியமிருந்திருக்காது. மேலும், 100 வயதில் தான் பெற்ற தன் பிள்ளையை பலிகொடுக்கவும் துணிந்திருக்க மாட்டான். ஆபிரகாமையும் அவன் குடும்பத்தினையும் போல மறுமைக்காக நாம் கர்த்தரை சார்ந்திருப்போம். இம்மைக்காக அவர் மேல் நம்பிக்கைகொள்வது பரிதாபத்திற்குரியதே (1 கொரி 15:19).

## 4. ஈசாக்கின் குடும்பம்

**எபிரேயர் 11:20** "விசுவாசத்தினாலே ஈசாக்கு வருங்காரியங் களைக்குறித்து யாக்கோபையும் ஏசாவையும் ஆசீர்வதித்தான்."

ஈசாக்கின் குடும்பம் பிறரை ஆசீர்வதிக்கின்ற குடும்பமாக இருக்கின்றது. அதனால் தான் ஈசாக்கு, அவன் வெட்டின துரவுகளை எல்லாம் அந்தந்த பட்டணத்து மக்கள் பிடிங்கிய போதும், அதனை தாராளமாக விட்டுக்கொடுக்க முடிந்தது. தான் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவன் என்ற விசுவாசங் கொண்டோரால்தான், மற்றவர்களை விசுவாசத்துடன் ஆசீர்வதிக்க முடியும். யார் எதை பறித்து சென்றாலும், அதனை பற்றிய பதட்டமின்றி வாழ முடியும். அங்கியை எடுத்துக்கொள்ள விரும்புகிறவனுக்கு, வஸ்திரத்தினையும் விட்டுவிடுபவன் தான் ஆசீர்வதிக்கப்பட்டவன்; ஆசீர்வாதத்திற்குரியவன் என்ற விசுவாசத்தை உடையோரால் தான் தைரியமாக செயல்பட முடியும். மேலும், ஆண்டவர் சொன்னதுபோல, நம்மை சபிக்கிறவர்களையும் ஆசீர்வதிக்கின்றவர்களாக வாழ முடியும்.

**மத் 5:44** "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச்சி நேகியுங்கள்;உ ங்களைச்ச பிக்கிறவர்களைச் ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்."

## 5. யாக்கோபின் குடும்பம்

**எபிரேயர் 11:21** "விசுவாசத்தினாலே யாக்கோபு தன் மரணகாலத்தில் யோசேப்பினுடைய குமாரர் இருவரையும் ஆசீர்வதித்து, தன் கோலின் முனையிலே சாய்ந்து தொழுது கொண்டான்."

யாக்கோபின் குடும்பம் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட சந்ததியாயினும், ஒருவகையில் நமக்கு எச்சரிப்பின் செய்தியையும் தருகின்ற குடும்பமாக இருக்கின்றது. யாக்கோபு தன் சகோதரனாகிய ஏசாவையும், தன் தகப்பனாகிய ஈசாக்கினையும் ஏமாற்றினான். பிற்காலத்தில் அவன் பிள்ளைகள் பத்துபேரும் அவனை ஏமாற்றினர். அவன் தன் தகப்பனை எமாற்றியபோது அவரடைந்த துக்கத்தினைவிட, பன்மடங்கு துக்கத்தினை, யோசேப்பினை அவன் சகோதரர்கள் அடிமையாக விற்றுவிட்டு, இறந்து விட்டான் என சொன்னபோதிலிருந்து, மீண்டும் யோசேப்பை காணும்வரையும் பெற்றிருந்தான். தீமையை விதைத்து நன்மையை அறுக்க முடியாது என்ற எச்சரிக்கையின் செய்தியை இந்த குடும்பத்திடமிருந்து நாம் பெற முடியும். அந்நிய நாட்டிற்கு சென்று, அங்கே பல வருடங்கள் கடுமையாக உழைத்தான். கர்த்தர் அவன் கைகளின் பிரயாசத்தினை ஆசீர்வதித்ததினால் இருபெரும் பரிவாரங்களுடையவனானான். சீக்கிரமாக பணக்காரனாகிடனும், கொஞ்சமாக உழைத்து நிறைய சம்பாதிக்கனும் என எண்ணுவோர் யாக்கோபின் குடும்பத்தினை நினைத்துப் பார்ப்போம் (**ஆதி 27–35**).

## 6. மோசேயின் குடும்பம்

**எபிரேயர் 11:23–28** "மோசே பிறந்தபோது அவனுடைய தாய் தகப்பன்மார் அவனை அழகுள்ள பிள்ளையென்று கண்டு, விசுவாசத்தினாலே, ராஜாவினுடைய கட்டளைக்குப் பயப்படாமல் அவனை மூன்று மாதம் ஒளித்துவைத்தார்கள். விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவ சந்தோஷங்களை அனுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்துகொண்டு, இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக

பாக்கியமென்று எண்ணினான். விசுவாசத்தினாலே அவன் அதரிசனமானவரைத் தரிசிக்கிறதுபோல உறுதியாயிருந்து, ராஜாவின் கோபத்துக்குப் பயப்படாமல் எகிப்தைவிட்டுப் போனான். விசுவாசத்தினாலே, முதற்பேறானவைகளைச் சங்கரிக்கிறவன் இஸ்ரவேலரைத் தொடாதபடிக்கு, அவன் பஸ்காவையும் இரத்தம் பூசுதலாகிய நியமத்தையும் ஆசரித்தான்."

மோசேயின் குடும்பம் முழுவதுமே இஸ்ரவேலின் இரட்சிப்பில், கர்த்தரால் பயன்படுத்தப்பட்ட பாத்திரமாக இருந்ததை நாம் வேதாகமத்தில் வாசித்து அறிய முடியும். அவனது தாய் தகப்பன் அவர்களது விசுவாசமும், அரச கட்டளைக்கு எதிரான தைரியமும், மோசேயின் அக்காவாகிய தீர்க்கதரிசி மிரியாம், லேவி கோத்திரத்தில் வந்து, ஆசாரிப்பு கூடாரத்தில் முதல் பிரதான ஆசாரியனாக பயன்படுத்தப்பட்ட ஆரோன். பார்வோனை எதிர்த்தது, தேவ திட்டத்தை எகிப்தில் செயல்படுத்தி, தேவ வழிகாட்டுதலின்படி இஸ்ரவேலரை கானான் எல்லை வரை அழைத்து வந்ததும், அவர்களுக்கான தேவ கட்டளையை பெற்று தந்ததிலுமிருந்து மோசேயை கர்த்தர் பயன்படுத்திய விதத்தை நாம் நன்கு அறிய முடியும். இன்றும் நாம் நமது குடும்பத்தினை கர்த்தருக்கு பயன்படுகின்ற குடும்பமாக உருவாக்கிக்கொள்ள முடியும். இப்படிப்பட்ட ஆவிக்குரிய முயற்சியில் நாம் நமது குடும்பத்தினை வழிநடத்துவது என்பது சவாலாக இருப்பினும், கிறிஸ்துவின் கிருபையும், ஆவியானவரின் வழிநடத்துதலும் இதனை சாத்தியப்படுத்தும் என்பது நிச்சயமே. யாரை எப்படி பயன்படுத்த வேண்டும், எதற்காக பயன்படுத்த வேண்டும் என்பதும் கர்த்தருடையதே. ஆயினும் கர்த்தர் பயன்படுத்த தகுந்த (தகுதியான) பாத்திரங்களாக நம்மை உருவாக்கிக்கொள்வது நம் கையில் தான் உள்ளது என்பதை நினைவில் கொள்வோம் (2 தீமோ 2:20-21). ஆகையால் விசுவாசத்துடன் நம் குடும்பத்தினை கர்த்தருக்கு உகந்ததாக உருவாக்கிட செயல்படுவோம்.

## 7. தாவீதின் குடும்பம்

**1 சாமுவேல் 16:10-13** "இப்படி ஈசாய் தன் குமாரரில் ஏழுபேரை சாமுவேலுக்கு முன்பாகக் கடந்து போகப் பண்ணினான்; பின்பு சாமுவேல் ஈசாயைப் பார்த்து; கர்த்தர் இவர்களில் ஒருவனையும் தெரிந்து கொள்ளவில்லை என்று சொல்லி; உன் பிள்ளைகள் இவ்வளவுதானா என்று ஈசாயைக் கேட்டான். அதற்கு அவன்; இன்னும் எல்லாருக்கும் இளையவன் ஒருவன் இருக்கிறான்; அவன் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கிறான் என்றான்; அப்பொழுது சாமுவேல் ஈசாயை நோக்கி; ஆள் அனுப்பி அவனை அழைப்பி; அவன் இங்கே வருமட்டும் நான் பந்தியிருக்க மாட்டேன் என்றான். ஆள் அனுப்பி அவனை அழைப்பித்தான்; அவன் சிவந்த மேனியும், அழகிய கண்களும் நல்ல ரூபமுள்ளவனுமாயிருந்தான். அப்பொழுது கர்த்தர்; இவன்தான், நீ எழுந்து இவனை அபிஷேகம் பண்ணு என்றார். அப்பொழுது சாமுவேல் தைலக்கொம்பை எடுத்து, அவனை அவன் சகோதரர் நடுவிலே அபிஷேகம் பண்ணினான்; அந்நாள் முதற்கொண்டு, கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின் மேல் வந்து இறங்கியிருந்தார்; சாமுவேல் எழுந்து ராமாவுக்குப் போய்விட்டான்."

தாவீதின் குடும்பம் எதை விதைப்போமோ, அதையே அறுப்போம் என்கின்ற ஆவிக்குரிய ஆழமான பாடத்தினை நமக்கு கற்றுத்தருகின்ற குடும்பமாக இருக்கின்றது. தாவீதின் அண்ணன்களோ (எலியாப், அமினதாப், சம்மா) போன்றோர், தன் தம்பியை இளக்காரமாக நடத்தினர். அதினால் அரசனாக தகுதியிருந்தும் ராணுவ வீரர்களாகவே இருந்தனர். தாவீதின் மகன்களாகிய அம்னோன், அப்சலோம், போன்றோர் பாவத்தினை விதைத்து சாபத்தினை அறுத்தனர். சாலமோனோ நன்மையை விதைக்கும் போது (கர்த்தரிடம் ஞானம் வேண்டி ஜெபித்து, தேவாலயம் கட்டியது) நன்மையையும், 40 ஆண்டுகள் அமைதியான அரசாட்சி, தனக்கெதிரே எவரும் நிற்கமுடியாத ஞானம், அளவிடமுடியாத செல்வம் போன்ற நன்மையை அறுத்தான். தாவீது தான் செய்த நன்மைக்கு நன்மையையும் (ஆடு மேய்த்தவன் அரசனானான்), தீமை செய்ததால் தீமையையும் (பிள்ளையின் இறப்பு, சங்கார தூதன் அழிப்பு, தேசத்தினை விட்டு துரத்தப்படுதல்) அறுத்தான். அவனது மனைவிகளான மீகாள், அபிகாயில், பத்சேபாள் போன்றோரிடமும் இந்த பாடத்தினை நாம் அறிய முடியும்.

நாம் எதை விதைக்கின்றோமோ? அதனை அறுப்போம் என வேதாகமம் அழுத்தமாக போதிக்கின்றது **கலாத்தியர் 6:7-10** "மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய

ஜீவனை அறுப்பான். நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக; நாம்; தளர்ந்து போகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம். ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மைசெய்யக்கடவோம்." ஆகையால் நாம் விதைப்பதை குறித்து எச்சரிக்கைகொள்வோம்.

பிரியமானவர்களே ! இதை போன்று வேதாகமத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பத்திலும் இருந்தும், நாம் ஏற்க வேண்டிய, மற்றும் களைய வேண்டிய பாடத்தினை கற்றுக்கொள்ள முடியும். ஆகையால் நாம் நமது குடும்பத்தினை, நன்றாக கர்த்தருக்கு பயந்து, அவருக்கு பிரியமான முறையில் வழிநடத்த முயல்வோம். குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் இதற்கு பொறுப்பானவர்களே! அப்பா செய்யட்டும் என அம்மாவோ, அம்மா செய்யட்டும் என பிள்ளைகளோ தட்டிக்கழிக்க முடியாது. முழுக்குடும்பமாக கர்த்தருக்கு கீழ்ப்படிந்து, நோவாவின் வீட்டாரைப் போல தேவ தண்டனைக்கு தப்பி, நித்திய இரட்சிப்பில் பங்குகொள்வோம். கர்த்தர் தாமே உங்களது இந்த தெய்வீக முயற்சியில் உங்களுக்கு வெற்றியை கட்டளையிடுவாராக!.

அன்புடன்
**ஆசிரியர்**

## வாசகர்களின் கவனத்திற்கு

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை G-Pay மூலம் அனுப்பி உங்கள் சந்தாவை புதுப்பித்துக் கொள்ளவும்.
நன்றி!

ஆண்டு சந்தா : ரூ. 120/-

G-Pay No. 92 4421 4421

அல்லது, வங்கிக் கணக்கில் செலுத்த,

A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSC Code : SBIN0011068
Branch : SBI - Bye Pass Road Branch, Madurai.

## Gospel Through Media by World Evangelism Team

**Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :** Every Sunday 6.45 - 7.00 a.m (TAMILNADU Contact Mobile : **92 4421 4421 & 92 4431 4431**) **Nambikai TV :** *Every Sunday 3.30 p.m.* ***Salvation TV :*** *Every Sunday 2.00 p.m.*

**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV :** Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

**Arjunan in Tamil on Nambikai TV & Radio :** TV : Every Monday & Saturday 7.30 - 7.45 p.m. Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :** Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m.

**Rakshana T.V :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 088423 63722)

**P.R. Swamy & Douglas in Tamil on Radio :** Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 09844070763)

**P.K. Varghese in Malayalam on JaiHind TV :** Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel. (KERALA Contact Mobile : 94470 35465)

**Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :** Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel.

# குடும்பத்தில் பெண்களின் பங்கு

சகோதரி : பேபி ராஜா



பிரியமான சகோதரிகள் அனைவருக்கும், இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களையும் ஸ்தோத்திரங்களையும் தெரிவிக்கிறேன். இன்று இந்த மாதம் குடும்பத்தில் பெண்களிற்கு கர்த்தர் கொடுத்துள்ள பங்கு (பொறுப்புகளை) பற்றி படிப்போம்.

## 1. தோழியானவள்

"ஏன் என்று கேட்கிறீர்கள், கர்த்தர் உனக்கும் உன், வயதின் மனைவிக்கும் சாட்சியாயிருக்கிறார். உன் தோழியும் உன் உடன்படிக்கையின் மனைவியுமாகிய அவளுக்கு நீ துரோகம் பண்ணினாயே." **மல்கியா 2:14.**

பெண்ணின் முதல் பங்கு, குடும்பத்தில் அவள் குடும்பத்தில் உள்ள அனைவரிடமும், குறிப்பாக தன் கணவனிடம் நல்ல தோழி போன்று இருக்க வேண்டும். எந்த ஒளிவு மறைவின்றி நடக்க வேண்டும். ரகசியம் பெண்களுக்கு ஒத்துவராது என்பார்கள். ஏனெனில் அவர்கள் எதுவாக இருந்தாலும் சொல்லிவிடுவார்கள் என்பர். இது எந்த அளவு உண்மையாயிருக்கின்றது என்றால், மற்றவர்கள் பற்றியதை ஒளிவுமறைவின்றி சொல்லிவிட்டு, தன்னை பற்றியதை சொல்லாமல் தவிர்த்துவிடுகின்றனர். இது தோழமையற்ற செயலாகும். ரூத் தான் செய்ய போவதை, செய்ததை ஒளிவுமறைவின்றி நகோமிக்கு அறிவித்தாள். நகோமியும் அவ்வாறே அறிவித்தாள். அதனால் அவளது தலைமுறை தலைத்தது **(ரூத் 1–4)**. அந்த தலைமுறையில் நமது ஆண்டவர் வந்து பிறந்தார். ஆன்லைனல்ல ஆயிரம் நண்பர்கள், சமுதாயத்தில் ஆயிரம் நண்பர்கள் என நாம் பெருமையாக சொல்லிக்கொள்ளலாம். குடும்பத்தில் உள்ளவர்களிடம் நாம் நட்பாக பழகுகின்றோமா? என யோசித்துப்பார்ப்போம்.

## 2. கீழ்ப்படிகிறவள்

"இப்படியே பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரிகளும் தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள். அந்தப்படியே சாராள் ஆபிரகாம் ஆண்டவன் என்று சொல்லி, அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள். நீங்கள் நன்மை செய்து ஒரு ஆபத்துக்கும் பயப்படாதிருந்தீர்களானால் அவளுக்குப் பிள்ளைகளாயிருப்பீர்கள்." **1 பேதுரு 3:5–6.**

மேலே சொல்லப்பட்ட வசனங்களில் பரிசுத்த பெண்கள் கீழ்ப்படிந்திருந்தனர் என நாம் வாசிக்கின்றோம். மகளாக இருந்தால் தகப்பனுக்கும் **(எபே 6:1–3)**, மனைவியாக இருந்தால் கணவனுக்கும் **(எபே 5:21–28)**. கீழ்ப்படிய பைபிள் நம்மை உற்சாகப்படுத்துகின்றது. கீழ்ப்படிதலை அடிமைத்தனம் என்பதாக புரிந்துக்கொள்ளப்படுவது பைபிளிற்கு முரணான சிந்தனையாகும். கீழ்ப்படிதலே மேல்படியாகும் என்பதனை புரிந்துக்கொள்வோம். ஏனெனில் கர்த்தருடைய சத்தத்திற்கு கீழ்ப்படிவது உயர்வை தரும்.

## 3. நம்பத்தகுந்தவள்

"அவள் புருஷனுடைய இருதயம் அவளை நம்பும்: அவன் சம்பத்துக் குறையாது." **நீதிமொழிகள் 31:11.**

பெண் என்பவள், குடும்பத்தில் நம்பிக்கைகுரியவளாக இருக்கின்றாள். அவளது இயல்பும், செயலும் அவளைப் பற்றிய நல்லெண்ணங்களை விதைப்பதால், அவள் தன் குடும்பத்தில் உள்ள அனைவரின் நம்பிக்கைக்கு உரியவளாக இருக்கின்றாள். அவளது நேர்மையான நடை அவளது தூய்மையை நம்ப வைக்கும், அவளது தெளிவான பேச்சு அவளது தெளிந்த புத்தியை உணர வைக்கும். ஆகையால் அன்பான சகோதரிகளே, நாம் நமது குடும்பத்தில் மகளாக, மனைவியாக, தாயாக, பாட்டியாக எல்லா பருவத்திலும் நம்பிக்கைக் குரியவர்களாக இருக்க வேண்டும். அதற்கேற்றாற் போல் செயலும், பேச்சும் மற்றும் சிந்தையும் கர்த்தருக்கு உகந்ததாக இருக்கும் பட்சத்தில் இது சாத்தியமே.

சகோதரிகளே, இன்னும் நிறைய பொறுப்புகளை வேத வசனங்களின் அடிப்படையில் நாம் கற்றுக்கொள்ள முடியும். நமக்கான பொறுப்புகளை நாம் நமது குடும்பத்தில் நிறைவேற்றும் போது, நம் குடும்பத்தினை கர்த்தருக்குள் ஆதாயப்படுத்தி, அவர்களை நித்தியத்திற்கு ஆயத்தப்படுத்திடலாம். ஆகையால், நம் குடும்பத்தில் நாம் செய்ய வேண்டியதை செய்வோம். அதே போல நம் ஆவிக்குரிய குடும்பமாகிய சபையிலும் நமக்கான பொறுப்புகளை செய்வோம். அவரவர் கிரியைகளுக்கு தக்க பலனளிக்கும் கர்த்தர் நம் பிரயாசங்களை ஆசீர்வதிப்பாராக.

# புத்திமானாய் நடந்த சவுல்

E. ஜோசப் பிரதீப்

அன்பான வாலிப சகோதர சகோதரிகளே ! உங்கள் அனைவருக்கும் உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தின் வாழ்த்துக்களை கூறிக் கொள்கின்றேன்.

வாலிப நாட்களில் எதை செய்யும்படி தீர்மானம் எடுக்கின்றோமோ, அதுவே நம்முடைய எதிர்காலத்தை தீர்மானிக்கின்றது. இந்த மாதத்திலும் வாலிப நாட்களில் எது சிறந்தது என தெரிந்துகொண்ட ஒரு வாலிபரைப் பற்றி வேதாகமம் மூலம் கற்றுக் கொள்வோம்.

கர்த்தர் தம்முடைய வேலையை செய்யும்படி தெரிந்துகொண்ட மக்கள் மிகவும் வித்தியாசப்பட்ட நபர்களாகவே இருந்திருக்கின்றனர். 1 சாமுவேல் 9:1-21 வசனங்களை வாசித்து பார்க்கும் பொழுது, சவுல் என்ற ஒரு அழகும் பராக்கிரமமும் நிறைந்த ஒரு வாலிபனைக் குறித்து வாசிக்க முடிகின்றது. அவன் மிகவும் உயரமான மனிதனாகவும், தைரியமாய் காரியங்களை செய்கிறவனாகவும் இருக்கின்றான். இவனுடைய தகப்பனார் பெயர் கீஸ், இவன் இஸ்ரவேலின் பென்யமீன் கோத்திரத்தை சேர்ந்தவன். இந்த சவுலின் வாலிப நாட்களில் இருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடங்களை தியானிப்போம்.

## 1. கீழ்ப்படிதலுள்ள சவுல் (Obedience)

**1 சாமுவேல் 9:3** "சவுலின் தகப்பனாகிய கீசுடைய கழுதைகள் காணாமற்போயிற்று; ஆகையால் கீஸ் தன் குமாரனாகிய சவுலை நோக்கி; நீ வேலைக்காரரில் ஒருவனைக் கூட்டிக்கொண்டு, கழுதைகளைத் தேட, புறப்பட்டுப்போ என்றான்."

சவுல் ஒரு கீழ்படிதலுள்ள மகனாக, தகப்பன் கைக்குள் அடங்கியிருக்கும் ஒரு மகனாக இருந்தான். அவனுடைய தகப்பனின் கழுதைகள் காணாமல் போன சூழ்நிலையில், தகப்பன் சவுலை நோக்கி நீ போய் கழுதைகள் தேடி கண்டுபிடித்து வா என்றவுடனே, அப்படியே கீழ்படிந்து தகப்பனின் கழுதைகளை தேடி சென்றான். பாருங்கள் என்ன ஒரு அழகான குணம், இந்த சவுலிடம் இருந்திருக்கிறது. மறுத்துப்பேசாமல், எதிர்த்து பேசாமல், சலித்துக்கொள்ளாமல் அப்பா சொன்ன உடனே அப்பாவின் வார்த்தைக்கு அப்படியே கீழ்ப்படியனும் என்ற சிறந்த குணத்தினை சவுலிடம் பார்க்க முடிகிறது. (எபே 6:1, உ.பா. 6:7).

## 2. கனப்படுத்துகிற சவுல் (Respect)

**1 சாமு 9:7** "அப்பொழுது சவுல் வேலைக்காரனைப் பார்த்து; நாம் போனாலும் அந்த மனுஷனுக்கு என்னத்தைக் கொண்டு போவோம் ; நம்முடைய பைகளில் இருந்த தின்பண்டங்கள் செலவழிந்து போயிற்று; தேவனுடைய மனுஷனாகிய அவருக்குக் கொண்டு போகத்தக்க காணிக்கை நம்மிடத்தில் ஒன்றும் இல்லையே என்றான்."

தன் தகப்பனுடைய கழுதையைக் கண்டுபிடிக்கும் வேலையில் தீவிரமாய் ஈடுபட்டிருந்த சவுலுக்கு, தன் உடன் வேலைக்காரர் ஒரு சிறு ஆலோசனையை சொன்னார். அது என்னவென்றால் நாம் வந்திருக்கிற இந்தப் பட்டணத்தில் தேவனுடைய மனுஷன் ஒருவர் இருக்கிறார் அவர் பெரியவர், அவர் சொல்லுகிறதெல்லாம் தப்பாமல் நடக்கும், அங்கே போவோம் என்றான். சவுலோ கர்த்தருடைய ஊழியக்காரரை சந்திக்க செல்லும்போது வெறும் கையோடே போவது நல்லதல்ல. அவரை கனப்படுத்த நாம் காணிக்கையாக எதையாகிலும் கண்டிப்பாக கொண்டு போக வேண்டும் என்றான். பாருங்கள் ஊழியக்காரரை விசாரிக்கிற, கனப்படுத்துகிற சிறந்த பண்பு இந்த சவுலிடம் இருந்திருக்கின்றது. தேவவேலை செய்கின்ற தேவ

## சிறுவர்க்கான கேள்விகள்

1. எல்லா நேரத்திலும் எல்லா இடத்திலும் யோசேப்பு எப்படி இருந்தார்?
2. நடுராத்திரியில் சிறையில் பவுலும் சீலாவும் என்ன செய்தனர்?
3. வசனத்தை கேட்ட சிறைச்சாலை அதிகாரியின் குடும்பம் என்ன செய்தது?
4. நோவாவும் அவன் குடும்பமும் எதை கட்டினார்கள்?
5. கொர்நெலியும் அவன் குடும்பமும் வசனத்தை கேட்க என்ன செய்தனர்?

தாசர்களிடம் எல்லா சூழ்நிலையிலும், ஒவ்வொரு பிரச்சனையிலும் வேத வசனத்தின் படியான அவர்களின் ஆலோசனையை கேட்டு, அதின்படி நாம் முடிவெடுக்கும் போது, அதில் பரலோகத்தின் தேவன் மகிமைபடுகிறவராயிருக்கின்றார்.

### 3. தன்னடக்கம் உள்ள சவுல் (Modesty)

**1 சாமு 9:21** "அப்பொழுது சவுல் பிரதியுத்தரமாக; நான் இஸ்ரவேல் கோத்திரங்களிலே சிறிதான பென்யமீன் கோத்திரத்தான் அல்லவா? பென்யமீன் கோத்திரத்துக் குடும்பங்களிலெல்லாம் என் குடும்பம் அற்பமானது அல்லவா? நீர் இப்படிப்பட்ட வார்த்தையை என்னிடத்தில் சொல்வானேன் என்றான்."

கழுதைகளை தேடிவந்த இடத்தில், கர்த்தருடைய ஊழியக்காரனாகிய சாமுவேலினால், சவுல் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்படுகிறான். இது எவ்வளவு பெரிய உயர்வு, சாதாரண குடும்பம். ஒரு பொருட்டாக எண்ணப்படாத வாலிபன். இப்பொழுது கிடைக்க இருக்கிறதோ மிகப்பெரிய பதவி. எல்லாராலும் திரும்பி பார்க்க கூடிய, போற்றக் கூடிய, மரியாதைக்குரிய நாட்டின் முதல் குடிமகனின் பதவி. என்னை யார் கவனிக்கப் போகிறார் என்ற எண்ணம் சவுலின் வாழ்க்கையில் பழிக்கிறதை நம்மால் கவனிக்க முடிகின்றது. பதவி மிதப்பில் தலைக்கனம் கொண்டெல்லாம் சவுல் இங்கே பேசவில்லை. தன்னை முற்றிலுமாக தாழ்த்துகின்றான். (Submissive – அடிபணிதல்) நான் சிறுமையானவன் என்ற தன்னை அர்ப்பணித்து (ஒப்புக்கொடுத்து) தன்னடக்கத்தை வெளிப்படுத்துகின்றார் வாலிபனாகிய சவுல்.

எனக்கன்பான வாலிபர்களே! சவுல் மிகச்சிறந்த வாழ்க்கையை வாழ்ந்திருக்க முடியும் என்பதை, வேதாகமம் மூலம் கற்றுக்கொள்ள முடிகிறது. கீழ்ப் படிவதில், கனப்படுத்துவதில், அடக்கமுள்ளவனாய் (பதவிகிடைத்தும்) இந்த வாலிபன் இருந்தது போல நாமும் இருக்க முயற்சி செய்வோம்.

தாய்தகப்பனுக்கு கர்த்தருக்குள் கீழ்ப்படிகிற பிள்ளைகளாக, ஊழியக்காரரை, வயதில் மூத்தவர்களை, ஆசிரியர்களை, கனம்பண்ணுகிற நல்ல முன்மாதிரியாக, எந்த உயர்ந்த நிலையை அடைந்தாலும் பெருமையில்லாத அடக்கமுள்ள சிறந்த வாலிப வாழ்க்கை வாழ்வோம். எல்லா வல்ல தேவன் தாமே இந்த முயற்சிகளில் கூட இருப்பாராக!

## சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. S. லக்ஷிதா – கரூர்
2. S. கனிஸ்கா – கரூர்
3. M. ராஜா – கரூர்
4. M. ஜோனாத்தான் – கரூர்
5. A. கார்பஸ் பிலேமோன் – மதுரை
6. A. ஹானா ஜோதி – மதுரை
7. P. அன்னாள் – மதுரை
8. P. டேனியல் பவுல்ராஜ் – மதுரை

*பொதுவான செய்திகள்*

## குறுந்தொகை


- குறுந்தொகை எட்டுத்தொகையில் உள்ள நூல்களுள் ஒன்று. இந்நூல் எட்டுத்தொகை நூல்களைத் தொகுத்துச் சுட்டும் பழம்பாடலில் ''நல்ல குறுந்தொகை எனச் சிறப்பித்து உரைக்கப்படுகிறது.
- இந்நூல் குறைந்த அடிகள் கொண்ட பாடல்களின் தொகுப்பாக இருப்பதால் குறுந்தொகை எனப் பெயர் பெற்றது.
- ஏனைய பழந்தமிழ் நூல்களைப் போல் இதுவும் 400 பாடல்களின் தொகுப்பாகவே இருந்திருக்க வேண்டுமென்றும் ஒரு பாடல் இடைச் செருகலாக இருக்கக் கூடுமென்றும் சிலர் கருதுகிறார்கள்.
- இந்நூலைத் தொகுத்தவர் பூரிக்கோ எனினும் தொகுப்பித்தவர் பெயர் இதுவரை கிடைக்கப் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இத்தொகுப்பில் அமைந்துள்ள 401 பாடல்களை 206 புலவர்கள் பாடியுள்ளனர்.
- உவமைச் சிறப்பால் பெயர் பெற்ற ஆசிரியர்கள் 18 பேர் இந்நூலில் காணப்படுகிறார்கள். கடவுள் வாழ்த்து பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்.
- குறுந்தொகை நான்கு முதல் எட்டு வரையான (307, 391ஆம் பாடல்கள் 9 அடிகளால் ஆனது). அடிகளைக் கொண்டமைந்த 401 பாடல்களின் தொகுப்பு ஆகும்.
- இந்நூல் அகப்பொருள்களை அகவற்பாக்களால் கூறுகின்ற போதும் முதற்பொருள் மற்றும் கருப் பொருட்களைவிட உரிப்பொருளுக்கே சிறப்பிடம் தந்துள்ளது.

# யோசேப்பின் குடும்பம்

கடவுளுக்கு பிரியமான பிள்ளைகளா, எல்லாரும் நல்லாயிருக்கிறீர்களா? உங்களை ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன். இந்த மாதம் யோசேப்பை பற்றியும், அவரின் குணத்தைப் பற்றியும் பார்க்கலாமா?

யோசேப்பு என்னும் அண்ணன் கடவுளுக்கு பிரியமான வனாகவும், தன் அப்பாவுக்கு செல்லப் பிள்ளையாகவும் இருந்தான். கர்த்தர் யோசேப்பு அண்ணனை கடவுள் உயர்த்துவதாக சொன்னாங்க, அதனால் அவன் கூட பிறந்த அண்ணன்மார்கள் பொறாமைப் பட்டு, குழியில் தூக்கிபோட்டனர். பின்பு எகிப்து தேசத்து வியாபாரிகளிடம் அடிமையாக விற்றுப்போட்டார்கள். அங்கு யோசேப்பு அண்ணன் அடிமையாக இருந்தாங்க, எல்லா நேரத்திலும் எல்லா இடத்திலும் உண்மையுள்ளவனாக இருந்தாங்க. அதனால் கர்த்தர் யோசேப்பு அண்ணனை ஆசீர்வதித்தார்.

பாவம் செய்ய கட்டாயப்படுத்தப்பட்ட போதும், அதை செய்யாமல் பரிசுத்தமாக வாழ்ந்தாங்க, கர்த்தர் முன்னறிவித்தபடியே உலகமெங்கும் பெரிய பஞ்சம் உண்டானது. அதனால் யாக்கோபு இருந்த ஊரிலும் தேசத்திலும் பஞ்சம் ஏற்பட்டது. உணவுக்கு வழியில்லாத நிலை ஏற்பட்டது. யோசேப்பின் அண்ணன்கள் உணவுக்காக தானியம் கேட்டு எகிப்திக்கு வந்தார்கள். யோசேப்பு தான் அதற்கு அதிகாரியாக இருந்ததால், அனைவரும் யோசேப்பிற்கு முன்பாக நின்றார்கள், யோசேப்பு அண்ணன் அவர்களை பழிவாங்காமல் அவர்களை மன்னித்து உணவுக்கு தேவையானதை கொடுத்து அனுப்பினான். மேலும் அவர்களையும் தன் தகப்பனையும் தன்னோடு வைத்து பராமரித்தாங்க, கர்த்தர் தொடர்ந்து யோசேப்பு அண்ணனை ஆசீர்வதித்தார்.



கடவுளுக்கு பிரியமான பிள்ளைகள்! நீங்களும் யோசேப்பு அண்ணன் போல கடவுளுக்கு பிரியமாக வாழ்வீர்களா! கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்

யோசேப்பு மாத்திரமல்ல, யோசேப்பின் அப்பா யாக்கோபும், அம்மா ராகேலும் கர்த்தருக்கு பயந்து வாழ்ந்தவர்கள். அவருடைய அண்ணன்களும் தங்கள் பாவத்தைவிட்டு திருத்தி, கர்த்தருக்கு பயந்து வாழ்ந்தனர் அதனால் தான் கர்த்தர் அவர்களை ஆசீர்வதித்து விருத்தியாக்கினார்.

**மனப்பாட வசனம் : தானி 9:10** "ஆனாலும் எங்கள் தேவனாகிய ஆண்டவரிடத்தில் இரக்கங்களும் மன்னிப்புகளும் உண்டு."

**– அன்பு ஏசுதாஸ்**

# சிறைச்சாலை அதிகாரியின் குடும்பம்



ஹாய் குட்டீஸ்! உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். சுவிசேஷ ஊழியத்தின் நிமித்தம் பிலிப்பி என்ற பட்டணத்திற்கு பவுலும் சீலாவும் சென்றார்கள். அங்கே என்ன நடந்ததென்பதை நாம் கற்றுக் கொள்ளலாம்.



பவுலும் சீலாவும் குறிசொல்லுகிற ஆவியையுடைய ஒரு பெண்ணை அந்த பட்டணத்திலே சுகப்படுத்தினார்கள். அந்த பெண்ணுக்குள் இருந்த ஆவியினாலே அதிக வருமானம் பார்த்த அவள் எஜமான் தன் வருமானம் அற்றுப்போனதை கண்டு, பவுலையும் சீலாவையும் அதிகாரிகளிடத்தில் ஒப்படைத்தார்கள். அதிகாரிகள் இருவரையும் நிறைய அடிகள் அடித்து காவலில் பத்திரமாக வைக்கும்படி சிறைச்சாலைக்காரனுக்கு ஒப்புக்கொடுத்தான். அவன் இவர்கள் கால்களை மரத்திலே கட்டி உட்காவல் அறையிலே பலமான காவல் வைத்தான்.

நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் வேனை துதித்து பாடிக்கொண்டும் ஜெபித்துக் கொண்டும் இருந்தார்கள். அப்பொழுது சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையத்தக்கதாக பூமி அதிர்ச்சி உண்டானது. உடனே கதவுகளெல்லாம் திறந்தது.

எல்லாருடைய கட்டுகளும் கழன்றுபோனது. ஆழ்ந்த தூக்கத்திலிருந்த சிறைச்சாலைக்காரன் என்ன செய்தான் தெரியுமா? கதவுகள் திறந்துக் கிடப்பதை பார்த்தது காவல் இருந்தவர்களெல்லாம் தப்பித்து ஓடிப்போயிருப்பார்கள் என தவறாக நினைத்து கத்தியை எடுத்து தன்னையே கொலை செய்யப் போனான்.

அப்பொழுது பவுல் மிகுந்த சத்தமிட்டு நீ உனக்கு எந்த கெடுதலும் பண்ணிக்கொள்ளாதே, நாங்கள் எல்லாரும் இங்கேதான் இருக்கிறோம் என்று சொன்னான். சிறைச்சாலைக்காரன் உள்ளே ஓடி பவுலுக்கும் சீலாவுக்கும் முன்பாக விழுந்து, அவர்களை வெளியே அழைத்து, அந்த ராத்திரி வேளையிலே சிறைச்சாலைக்காரன் இருவரையும் அழைத்துக் கொண்டுபோய் அவர்கள் காயங்களுக்கு கட்டுகளை போட்டான். மேலும், அவர்களிடம் ஆண்டவன்மாரே, இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்ய வேண்டுமென்று கேட்டான். அவர்கள் அவனுக்கும் அவன் வீட்டார் அனைவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்கள். அந்த ராத்திரியிலே அவனும் அவன் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்று கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்தனர்.

குட்டீஸ்! அந்த சிறைச்சாலைக்காரனும் அவன் வீட்டாரும் வசனத்தை கேட்டவுடனே, அது எந்த நேரம் என்று கூட பார்க்காமல், உடனே அதற்கு கீழ்ப்படிந்தார்கள். நாமும் வசனம் நமக்கு சொல்வதை கேட்கும்போது, உடனே அதற்கு கீழ்ப்படிந்து நடக்க முடிவெடுத்து, நடந்தால் கடவுளுடைய ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ளலாம்.

**மனன வசனம் : யாக்கோபு 1:22** "அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்தரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்".


**– குயினி பிரதீப்**

# கொர்நெலியுவின் குடும்பம்

**சிறுவர் பகுதி**

அன்பான மழலை செல்லங்கள் அனைவருக்கும், நமது ஆண்டவர் இயேசுவின் நாமத்தில், அன்பின் வாழ்த்துக்கள். கொரனா மூன்றாம் அலை பரவ போகின்றது என சொல்கின்றனர். அதனால் செல்லங்களே, நல்லபடியாக அப்பா, அம்மா சொல்வதை கேட்டு கவனமாக இருங்க, ஆன்லைன் வகுப்புகளில் ஒழுங்கா படிங்க, எல்லாம் சீக்கிரம் மாறும் நம்பிக்கையுடன் ஜெபிங்க, ஓகே தானே!

சரி இந்த மாதம் நாம் கொர்நெலியு என்பவரின் குடும்பத்தினை பற்றி தெரிந்துகொள்வோமா? இந்த கொர்நெலியு என்பவர் ராணுவத்தில் உயர் பதவியில் இருந்தார். இவரும் இவரது குடும்பமும் பரலோக கடவுளுக்கு மிகவும் பயந்து வாழ்ந்தனர். குடும்பமாக கர்த்தரை தேடினர் மற்றும் கஷ்டப்படுகிறவர்களுக்கு நிறைய தரும காரியங்களை (கைமாறு கருதாமல் உதவிகளை) செய்தனர். ஒருமுறை இறைதூதன் (தேவதூதன்), கொர்நெலியுவின் முன்பு வந்து, யோப்பா பட்டணத்தில் இருக்கின்ற பேதுவை அனுப்பி, அவர் நீங்கள் செய்ய வேண்டிய காரியங்களை உங்களுக்கு அறிவிப்பான் என்று சொன்னார்.



கொர்நெலியு தன் ராணுவத்தில் மற்றும் வீட்டில் இருந்த சிலரை அனுப்பி, பேதுருவை அழைத்து வரச் சொன்னார். கொர்நெலியுவின் ஆட்கள் பேதுருவை அழைக்கும் முன்பே, ஆவியானவர் பேதுருவிடம் உன்னை அழைக்கின்றவர்களுடன் போ என்றார். பேதுரு அவர்களுடன் சென்றார். பேதுரு வருவதற்குள் கொர்நெலியுவும் அவன் வீட்டாரும் தங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்கள் எல்லாரையும் அழைத்து, பேதுரு சொல்லப்போகின்ற கர்த்தருடைய வார்த்தையினை கேட்க காத்திருந்தனர்.

பேதுரு, அவர்கள் வீட்டிற்கு வந்து, கர்த்தருடைய வார்த்தையினை சொல்லி, அவர்களை திருமுழுக்கு

பெறும்படி கூறினார். பேதுரு சொன்ன கர்த்தருடைய கட்டளைக்கு அவர்கள் குடும்பமாக கீழ்ப்படிந்தனர். மேலும், அவர்கள் குடும்பமாய் கிறிஸ்துவின் திருச்சபைக்கு மிகவும் உதவியாகவும் இருந்தனர்.

செல்லங்களே, நாமும் கொர்நெலியுவின் வீட்டில் உள்ளவர்களை போல, கர்த்தருக்கு பயந்து, அவர் சொல்கின்ற சத்தியத்தின்படி நடந்து, கிறிஸ்துவின் திருச்சபைக்கு உதவியாக இருப்போம். கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பார்.

**மனப்பாட வசனம் : அப்போஸ்தலர் 10:35** "எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்."

**– பிரியா ஆண்டனி**

# நோவாவின் குடும்பம்

அன்புள்ள குட்டி பிள்ளைகளா ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகள். இந்த மாதம் நம்ம நோவா தாத்தாவை பற்றியும், அவருடைய குடும்பத்தைப் பற்றியும் தெரிந்துக்கொள்ளப் போகிறோம் சரியா?

கர்த்தர் இந்த உலகத்தை ரொம்ப அழகாக படைத்தார். உலகத்தில் வாழும் எல்லா மக்களையும் மிகவும் நேசித்தார். ஆனால், நோவா தாத்தா காலத்தில் வாழ்ந்த மக்கள் எல்லாரும் கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்தார்கள். இவற்றை கடவுளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. மிகவும் வருத்தப்பட்டார். வேதனை அடைந்தார். இந்த உலகத்தை அழிக்க வேண்டும் என்று முடிவு எடுத்தார்.

கடவுள் தனக்கு பிரியமான ஒரு நபராவது இருக்காங்களா என்று தேடினார். அப்பொழுது, நோவாவை கண்டார். அவன் கடவுளுக்கு பயந்து, அவருக்கு பிரியமாக வாழ்ந்து வந்தான். உடனே அவனை அழைத்து நான் இந்த உலகம் முழுவதையும் அழிக்கப்போவதில்லை. நீ ஒரு பேழையை உண்டு பண்ணு என்றார். அதில் நீயும் உன் குடும்பமும் நான் படைத்த அனைத்து ஜீவ ராசிகளும் ஜோடி ஜோடியாக ஏற்றப்பட வேண்டும் என்றார். நோவாவும் அவர் குடும்பமும் பேழையை (பெரிய கப்பலை) கட்ட ஆரம்பித்தனர்.



அந்த தருணத்தில் அந்த தேசத்து மக்கள் எல்லாருக்கும் கடவுளைப் பற்றி சொன்னார். அவர்களை பாவத்தை விட்டு மனந்திரும்ப சொன்னார். இல்லையென்றால் கர்த்தர் வெள்ளத்தால் எல்லாரையும் அழித்து விடுவார் என்று சொன்னார். யாருமே நோவா கூறுவதை நம்பவில்லை, ஏற்கவில்லை நோவாவும் அந்த பேழையை கட்டி முடித்தார். தேவன் படைத்த எல்லா மிருக ஜீவன்களையும் அதில் ஜோடி ஜோடியாக ஏற்றி விட்டார்கள். நோவாவின் குடும்பமும் அதின் உள்ளே சென்றனர். பேழையின் கதவை கர்த்தர் மூடிவிட்டார். மழை பெய்ய ஆரம்பித்தது. பெரு வெள்ளம் வந்து இந்த உலகமே அழிந்துவிட்டது. ஆனால் கடவுளுக்கு பயந்து வாழ்ந்ததால் நோவாவும் அவன் குடும்பமும் காப்பாற்றப்பட்டார்.

ஆம் பிள்ளைகளா! நாமும் இந்த உலகமே தப்பு செய்தாலும், நாம் கடவுளுடைய பிள்ளையாக, வேதாகமம் சொல்லுகிறபடி நடந்தால், வாழ்ந்தால் கர்த்தர் நம்மை காப்பாற்றுவார். மாறாக பாவம் செய்தால் இந்த உலகத்தோடு சேர்ந்து நாமும் அழிந்து போய்விடுவோம். ஆகையால் கர்த்தருக்கு பயந்து கீழ்படிந்து நடப்போம்.

**மனப்பாட வசனம் : சங்கீதம் 128:1** "கர்த்தருக்குப் பயந்து அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான்."

**– பெவர்லி கிங்ஸ்லி**

# 2. தொழுகையில் இசைக்கருவிகளைப் பயன்படுத்துவது.

### முடிவுரை

1. நான் சேவை செய்ய சித்தமாயிருக்கிறேன். ஜுன் ஸ்ட்ரீட் தொடர்ச்சியாக நடத்திய உணவு விடுதி வியாபாரத்தில் லட்சக் கணக்கில் சம்பாதித்தார். உணவு விடுதி நடத்தும் தொழிலில் எப்படி வெற்றிகரமாக இருக்க முடிந்தது என்பதைக் கண்டறிந்ததைப் பற்றி கூறுவது. உனக்கு அவர் வேலையாளின் மனப்பான்மை இல்லாவிட்டால் அது செயல்படாதது. ஒரு உணவு விடுதி விஷயத்தில் உண்மையான சபையைப் பொறுத்தமட்டில் இது எவ்வளவு அதிகம்.

2. நடத்தும் தலைவர்கள் கூட விசேஷமாக என்று சொல்லலாம். கட்டாயம் சேவகர்களாயிருக்க வேண்டும்.

3. சபையானது சேவை செய்யக்கூடியதாயிருக்க வேண்டும். மற்றவர்களின் சேவகனாய் கடவுளின் சேவகனாயிருக்க வேண்டும்.

1. கிறிஸ்துவமார்க்கத்தின் வரலாற்றில் உபதேசங்கள் மற்றும் நடைமுறைகள் குறித்து பல்வேறு மாறுபட்ட கருத்துக்கள் இருந்ததுண்டு.

2. அப்படிப்பட்ட குறித்து வேறுபாடுகளுள் இசைக் கருவிகளைப் பற்றியதும் ஒன்று சபைகள் இந்த விசயத்தில் மாறுபட்டு பிரிந்திருக்கின்றன.

3. இன்று சிலரே இதைக் குறித்து உண்மையான கரிசனையுடையவர்களாயிருக்கின்றனர்.

4. இன்று சபையில் அநேகர் இதை எதிர்ப்பதில்லை. சில பிரசங்கியார்கள், சபை தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும் இல்லாவிட்டால் எதிர்காலம் மிகவும் இருண்டதாயிருக்கும் என்கின்றனர். அதாவது இவைகளை எதிர்த்து இயங்கக் கூடிய சிறுசிறு சபைகளைத் தவிர வேறு சபைகள் இருக்காது என்கின்றனர்.

5. வேதம் பல விதமான தொழுகைகளைப் பற்றி விளக்கிச் சொல்கிறது. சுய விருப்பத்தின்படி தொழுதுக்கொள்வது. வீணான தொழுகை அறியாமையில் தொழுதுக்கொள்வது மற்றும் உண்மையாய்த் தொழுதுக்கொள்வது ஆனால் ஒரே விதமான தொழுகை மட்டுமே தேவனுக்கு ஏற்புடையது.

1. நாம் அதை பயன்படுத்துவதில்லை என்று ஏன் சிலர் சொல்கிறார்கள். நாம் மாறுபட்டவர் களாயிருக்க விரும்புகிறோம்.

1. பிடிவாதமாக இருப்பது.

2. வித்தியாசமாக காணப்பட விரும்புவது.

3. தொல்லை கொடுப்பவர்களாக இருப்பது. ஆகையால் எலியாகூட தொல்லை கொடுப்பவர் என்று கூறப்பட்டார். "இஸ்ரவேலை கலங்கப் பண்ணுகிறவன் நீயல்லவா?" (1 இராஜாக்கள் 18:17).

நல்ல இசை தெரியாது அல்லது இசையில் விருப்பமில்லை.

1. நான் ஒரு இசைக்கலைஞனல்ல அல்லது நல்ல இசையை கற்றுக்கொடுக்கவில்லை.

2. மற்ற அநேகர் இசையை நன்கு கற்றுக் கொடுக்கும் பள்ளிகளை விரும்புகிறார்கள் புத்தகங்கள் வாயிலாக இசையை அறிந்திருக்கிறார்கள். அநேக இசைக்கருவிகளை இசைக்கிறார்கள் மற்றும் பல வழிகளில்

3. அநேகமாக எல்லா சபைகளிலும் ராகத்தோடு பாடுவதற்கேற்ப இசைக்கக் கூடியவர்கள் யாராவது இருக்கிறார்கள்.

C. பாரம்பரியத்தில் கட்டுண்டவர்கள்

1. எது புதிதாயிருந்தாலும் அதற்கு நாம் எதிரிகள்.

2. நாம் கைக்கொள்ளுகிற எல்லாமே பாரம்பரியம் தான் என்று பிரசங்கியார்கள் சொல்லுகிறார்கள்.

II. இதைக் குறித்த மூலவாக்கியம்

A. கொலோசெயர் 3:17

1. இதன் அர்த்தம் கிறிஸ்துவின் அதிகாரத்தை எல்லாவற்றிலும் மதித்து நடப்பதாகும்.

2. தனிப்பட்ட ஒழுக்க நெறி மற்றும் நன்னடத்தை தொடபானவற்றில் இது உண்மையாகும்.

3. இது நம்முடைய எண்ணங்கள், செயல்கள், இரகசியமானவற்றில் கூட உண்மையாகும்.

4. இது கிறிஸ்தவர்களின் பொது கூடுகைகளில் செயல்பாட்டுக்கு பொருந்துவதாகும்.

தத்துவம் (அல்லது விதி) : தேவன் ஒன்றை நம்மிடம் செய்ய வேண்டுமென்றும் அதை எப்படிச் செய்ய வேண்டுமென்றும் அதை எப்படிச் செய்ய வேண்டுமென்றும் சொல்லியிருக்கும் போது அதை நாம் அவர் சொல்லியது என்னவோ அதை சொல்லிய படியே செய்ய வேண்டும்.

B. பக்திமார்க்கத்தில் சொல்லப்பட்டபடி செய்வது நமக்கு பிரச்சனையாயிருக்கிறது. ஆனால் அதனுடைய முக்கியத்துவத்தை நாம் மற்ற செயல்பாடுகளில் புரிந்துக் கொள்ளுகிறோம்.

1. சமையல், சமையற் குறிப்பில் 4 முட்டைகள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. வேறு எண்ணிக்கையில் பயன்படுத்தினால் அது சமையற் குறிப்பை மாற்றுவது மட்டுமல்ல அதன் ருசியும் மாறுபடும்.

2. திருமண வரவேற்பில் தேதியும் நேரமும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

வேறு எந்த நாளையும் நேரத்தையும் இது தவிர்க்கின்றது.

C. நோவா : "நோவா அப்படியே செய்தான் தேவன் தனக்கு கட்டளையிட்ட படியெல்லாம் அவன் செய்து முடித்தான் (ஆதியாகமம் 6:22).

1. கொப்பேரு மரத்தினால் ஒரு பேழையை செய்யச் சொல்லி உள்ளும் புறமும் அப்படியே ஓரிடத்தில் நிறுத்தச் சொன்னார்.

2. அவருக்கு பேழையினுடைய சரியான அளவைக் கொடுத்தார். எத்தனை அடுக்குள், சன்னல்கள், கதவுகள் மற்றும் அதன் அளவுகளைக் கொடுத்தார்.

3. எத்தனை மிருகங்களை பேழைக்குள் கொண்டுவர வேண்டுமென்று சொன்னார்.

4. தேவன் சொல்லியபடியே நோவா செய்தார். எந்த மாற்றமும் கீழ்ப்படியாமையாகும். நோவா நிச்சயம் அதற்குரிய விலையைக் கொடுத்திருப்பார்.

1. மத்தேயு 26

1. இயேசு திருவிருந்தை ஏற்படுத்தினார். அதில் அப்பமும் திராட்சை ரசமும் பயன்படுத்தும்படி சொன்னார்.

2. சிலர் கேக்கும் கொகோ கோலாவும் கூட சரியானதுதான் என்று வாதிடுகின்றனர்.

3. நாம் அப்பத்தையும் திராட்சை ரசத்தையும் பயன்படுத்துகிறோம். ஏன் ஏனென்றால் இயேசு அப்படிச் செய்யும்படி சொன்னதால் புதிய ஏற்பாடு பாட மட்டுமே அதிகாரமளிக்கிறது.

4. சங்கீதங்களினாலும் கீர்த்தனைக்களினாலும் ஞானப் பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு உங்கள் இருதயத்தில் கர்த்தரைப்பாடி கீர்த்தனம் பண்ணி (எபேசியர் 5:19).

"பாடிக்கீர்த்தனம் பண்ணி என்ற வார்த்தைகளில் இசைக்கருவியும் உள்ளடக்கப்பட்டதே என்று அநேகர் சொல்கிறார்கள். பாட்டிற்கு சபையின் பிரசங்கியார் ஒருவர் இசைக்கருவி இல்லாமல் பாட முடியாது என்கிறார். அவர் சார்ந்திருந்த பிரிவினை சபையாரே அநேக வருடங்கள் இசைக்கருவிகளின் உபயோகத்தை எதிர்த்தார்கள். அனைத்து பேரறிவாளர்களும் ஆதித்திருச்சபையில் வாய்ப்பாட்டு மட்டுமே இருந்தது என்பதை, யூதர்களின் 22 சங்கங்களிலும் ஜெப ஆலயங்களிலும் மேலும் கிரேக்கர்கள் தங்கள் விக்கிரக வழிபாட்டின் போதும் இசைக் கருவிகளை பயன்படுத்தியிருந்தாலும் ஆதித்திருச்சபையில் வாய்ப்பாட்டு மட்டுமே இருந்தது என்பதை பேரறிவாளர்கள் ஒத்துக் கொள்கிறார்கள். அது உண்மையாய் இருக்குமானால் ஏன் பவுலும் ஆதித்திருச் சபையினரும் (இசைக் கருவியை) பயன்படுத்தவில்லை?

2. குறிப்பிடப்பட்டுள்ள கருவி இதயம் இது புதிய ஏற்பாட்டின் படியான ஆவிக்குரிய தொழுகையானது பழைய ஏற்பாட்டின் படியான சரீரப்பிரகாரமான தொழுகைக்கு வேறுபட்டதாயிருக்கிறது.

3. கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப் பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்தி சொல்லிக் கொண்டு உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி (கொலோசெயர் 3:16) ஆவிக்குரியதைத்தான் இங்கே மறுபடியும் வலியுறுத்துகின்றனர்.

(அடுத்த இதழில் தொடரும்...)

## ஆகஸ்ட் மாத கேள்விகள்

1. "நானும் என் வீட்டாரும் கர்த்தரையே சேவிப்போம்" என்றது யார்?
2. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் பரதேசி போல சஞ்சரித்தது யார்?
3. அவபக்தியுள்ளவர்கள் நிறைந்த உலகத்தின் மேல் கர்த்தர் வரப்பண்ணினது என்ன?
4. நம்மை சபிக்கிறவர்களை நாம் என்ன செய்ய வேண்டும் என ஆண்டவர் இயேசு சொன்னார்?
5. கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணியவன் யார்?
6. நன்மை செய்கிறதில் சோர்ந்துப் போக கூடாது ஏன்?
7. "கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும் சாட்சியாக இருக்கிறார்" என வாசிப்பதெங்கே?
8. பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாக இருந்த பெண்கள் தங்களை எப்படி அலங்கரித்தார்கள்?
9. தேவனுடைய மனுசனுக்கு கொண்டுபோக காணிக்கை இல்லை என வருத்தப்பட்டது யார்?
10. விசுவாசத்தினாலே ஈசாக்கு என்ன செய்தார்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 5-9-2021**

அனுப்ப வேண்டிய முகவரி : சகோதரி. **பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல்: 92 4421 4421, 92 4431 4431

### சென்ற இதழ் பதில்கள்

1. ஆமோஸ் 4:12
2. லூக்கா 2:37
3. சங் 42:2
4. மத்தேயு 9:15
5. யாக்கோபு 4:6
6. 1 தீமோ 2:3
7. 2 கொரி 11:2
8. 2 கொரி 10:12
9. லூக்கா 12:47
10. வெளி 22:12

### சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1. Mrs. ஹெலன் திலக் – மதுரை
2. S. அசோக்குமார் பிரின்ஸ் – தூத்துக்குடி
3. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி – திருச்சி
4. Mrs. ஜெயமணி ராஜம்மாள் – கடலூர்
5. A.G. சாமுவேல் – தூத்துக்குடி
6. Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
7. Mrs. பிரேமலதா சுந்தர்பாபு – செங்கல்பட்டு
8. Mrs. சாந்தி வில்லியம் – புதுக்கோட்டை
9. Mrs. சாந்தி ஜோயல் – திருச்சி
10. Mrs. காந்தா மனோகரன் – திருச்சி
11. J. சுந்தரபாய் வில்லியம் – சேலம்
12. Mrs. பெரில் பாஸ்கர் – படப்பை
13. Mrs. ராணி சாந்தகுமார் – மதுரை
14. S. பாக்கிய ராஜம் – மதுரை
15. Mrs. அன்னதாய் ஆல்பர்ட் – தூத்துக்குடி
16. R. ஞானசிரோன்மணி – மதுரை
17. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்
18. Mrs. சமாதானம் பீட்டர் – விருதுநகர்
19. J. ஜான்சி – ஆனைமலை
20. Mrs. D. குளோரி திலகவதி – சென்னை
21. P. ஜெயராஜ் செல்வி – நாமக்கல்
22. M.S. ஜேம்ஸ் – திண்டுக்கல்
23. A. ஆனந்த கதிரோன் – சென்னை
24. I.G. ரோஸ்லின் – நெல்லை
25. Mrs. டேவிட் ஜெயச்சந்திரன் – மதுரை
26. I.D. தேவதாசன் – நெல்லை
27. D.S. ஜெபநேசன் – திண்டுக்கல்
28. S.G. சேகர் – வேலூர்
29. R. சரோஜா – தென்கலம்
30. Mrs. செல்வமணி ஜேம்ஸ் – சேலம்
31. Mrs. D. மீனாள் தெய்வசிகாமணி – மூலனூர்
32. D. வர்ஷினி – மூலனூர்
33. P. பரமேஸ்வரி – மூலனூர்
34. D. விக்னேஷ் – மூலனூர்
35. M.S. ஜேம்ஸ் – திண்டுக்கல்
36. Mrs. ஜோதிமணி அப்பாதுரை – மதுரை
37. Mrs. A. ரோஸ்மேரி – சென்னை
38. I.G. ரோஸ்லின் – நெல்லை
39. Mrs. டேவிட் ஜெயசந்திரன் – மதுரை
40. தேவதாசன் – நெல்லை
41. ஜெபநேசன் – திண்டுக்கல்


**தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !**

Owned, Published & Edited by P.C. PHILEMON RAJAH
Place of Publication : Arasaradi, Madurai
Printer's Name : N. JAYAKARTHIKEYAN
Printed at Thee Classic Printers Madurai-1 Phone 2323819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2021 - 2023
Date of Publication : 8th September 2021
Posted at Arasaradi HPO on 10th 11th September 2021

## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்








அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/-மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்






## கைபிரதிகள்









உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431


## BIBLE STUDY BOOKS IN ENGLISH











AVAILABLE FOR SPECIAL PRICE!

If undelivered please return to :

EDITOR
KIRUBAIYULLA VAARTHAI

45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To

Visit www.graciousword.org to read kv magazine online
follow us in facebook : NT Gospel Restorers